Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## வாடிக்கையாளர்கள், குடும்பத்தினர் மற்றும் ஆய்வுப் பங்கேற்பாளர்களிடமிருந்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ)

### 1. மக்கள்தொகைத் தரவு என்றால் என்ன?

மக்கள் தொகையியல் தரவு என்பது குறிப்பிட்ட நபர்களை நன்கு புரிந்துகொள்ளச் சேகரிக்கப்படும் தகவலைக் குறிக்கிறது. உதாரணமாக, வயது, இனம் மற்றும் பாலினம்; வேலை, கல்வி மற்றும் வருமானம் போன்ற தரவுகள்.

### 2. ஹாலண்ட் ப்ளூர்வியூ சிறுவர் மறுவாழ்வு மருத்துவமனை ஏன் வாடிக்கையாளர், குடும்பத்தினர் மற்றும் ஆராய்ச்சிப் பங்கேற்பாளர்களின் மக்கள்தொகைத் தரவுகளைச் சேகரிக்கிறது?

ஒவ்வொரு வாடிக்கையாளரும் மற்றும் ஆராய்ச்சிப் பங்கேற்பாளரும், எங்களால் வழங்கக்கூடிய மிக உயர்ந்த தரத்திலான சுகாதாரப் பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்வதே எங்கள் குறிக்கோளாகும்.

நீங்கள் வழங்கும் தகவல்:

1. நாங்கள் யாருக்கு சேவை செய்கிறோம், ஆராய்ச்சியில் யார் பங்கேற்கிறார்கள் என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

2. உங்கள் குழந்தைக்கு மிகவும் உதவியாக இருக்கும் மருத்துவ சேவையைத் திட்டமிட உதவியாக இருக்கும் மற்றும்

3. பராமரிப்பின் தரத்தை மேம்படுத்தவும், அனைவருக்கும் ஆராய்ச்சிக்கான அணுகலை வழங்கவும் எங்களுக்கு உதவுங்கள்.

### 3. எனது குழந்தை ஆலோசனைக்கா மட்டுமே இங்கே வந்திருக்கிறார். அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

நாங்கள் யாருக்கு யாருக்குச் சேவை வழங்குகிறோம் என்பதை அறிவது முக்கியம். நாங்கள் தகவலைச் சேகரிக்கும்போது, எங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் அவர்களுக்கு எந்த வகையான உதவி அல்லது மருத்துவ சேவைகள் தேவைப்பாடுகிறது என்பதை. தெரிந்துகொள்கிறோம்.எங்களிடம் வரும் அனைவரிடமிருந்தும் இந்தத் தகவலைச் சேகரிப்பதன் மூலம், வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட, சமமான சேவைகளைத் திட்டமிடுவதில் நாங்கள் சிறந்து விளங்குகிறோம்.

**4. இந்தக் கேள்விகளை என்னிடம் கேட்பது சட்டவிரோதமா?**

இல்லை. The Ontario Human Rights Code, பாகுபாட்டை அடையாளம் காண்பது மற்றும் சமபங்குகளை மேம்படுத்தும் நோக்கமாக இருக்கும் போது, இதுபோன்ற தரவுகளைச் சேகரிப்பதை ஊக்குவிக்கிறது.

**5. இந்தத் தகவலைச் சேகரித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?**

உங்கள் தகவல்களை Holland Bloorviewபயன்படுத்துகிறது, அதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்த்தினார்கள் யார் என்பதை நாங்கள் நன்கு புரிந்து கொள்ளவும், சேவைகளைத் திட்டமிடவும், சேவை வழங்கும் அனைத்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கும் சிறந்த மருத்துவ சேவை வழங்குவதை உறுதிசெய்ய முடியும். உதாரணமாக:

1. மொழி, இயலாமை, பாலினம் போன்ற காரணிகளால் வாடிக்கையாளரின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய இந்தத் தரவு உதவியாக இருக்கும்.
2. இந்தத் தகவல் மதிப்பாய்வு செய்யப்பட்டு, நிரல் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும்.

உங்கள் பதில்கள், உங்கள் குழந்தையின் தேவைகளுக்கு ஏற்பப் பராமரிப்பைத் தனிப்பயனாக்கவும், எதிர்கால ஆய்வுகள் மற்றும் தலையீடுகளைத் திட்டமிடவும் எங்களுக்கு உதவும்.

**6. எனது தகவலை யார் பார்க்கலாம்?**

உங்கள் தகவல்கள், உங்கள் குழந்தையின் பராமரிப்புக் குழு, ஆராய்ச்சிக் குழு (ஆராய்ச்சி நெறிமுறைகள் வாரியத்தின் ஒப்புதலுடன்) மற்றும் மிகச் சில ஆராய்ச்சிச் செயல்பாட்டுப் பணியாளர்களால் பார்க்கப்படும். நீங்கள் பகிர்ந்துகொள்ளும் மற்ற அனைத்து உடல்நலம் சார்ந்த தகவல்களுக்கும் அளிக்கப்படும் அதே அளவிலான ரகசியத்தன்மையுடன் இதுவும் கையாளப்படும்.

நிறுவனக் கற்றல் திட்டங்கள் அல்லது Ontario Health-க்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நேர்வுகளில், தரவுகள் தொகுக்கப்பட்ட வடிவில் மட்டுமே கிடைக்கும். பதில்களுடன் தொகுக்கப்படும் மற்றும் உங்களை அல்லது உங்கள் குழந்தையை தனிப்பட்ட முறையில் அடையாளம் காண முடியாது (அதாவது பெயர், முகவரி, காப்பீட்டுத் தகவல் போன்றவை).

**7. என் குழந்தையின் இயலாமை (அல்லது இனம், பாலியல் நோக்குநிலை போன்றவை) போன்ற தகவலை ஏன் கேட்கிறீர்கள்?**

எங்கள் மருத்துவமனையில் சேவை பெறுவோர் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகளில் பங்கேற்போரைத் தெளிவாக அடையாளம் காண்பதும், எங்கள் வாடிக்கையாளர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் ஆராய்ச்சிப் பங்கேற்பாளர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதும் எங்கள் நோக்கமாகும். சில நேரங்களில் மக்கள் மருத்துவ சேவைகளில் பாகுபாடுகளை அனுபவிப்பதையும் நாம் அறிவோம். அவ்வாறு நடக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம், அவ்வாறு நடந்தால், அதைச் சரிசெய்ய விரும்புகிறோம்.

உங்கள் பதில்கள் உங்கள் குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, குறிப்பிட்ட மருத்துவ சேவையை வழங்க உதவும்.

குழந்தைகள் வளர்ச்சி நிலையில் இருப்பதால், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அறியாமல் இருக்கலாம். உங்கள் குழந்தைக்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் மிகவும் பொருத்தமானதாகக் கருதும்போது, "தெரியாது" அல்லது "பதிலளிக்க விரும்பவில்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**8. என் குழந்தையின் பிறந்த இடத்தைப் பற்றி ஏன் கேட்கிறீர்கள்?**

ஒரு குழந்தை அல்லது குடும்பம் எங்கிருந்து வந்தாலும், அல்லது அவர்களின் குடியேற்ற நிலை என்னவாக இருந்தாலும், அவர்கள் சிறந்த கவனிப்பைப் பெறுவதை நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

**9. நான் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறேன் என்பதை நீங்கள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? அந்த தகவலை ஏதேனும் ஏஜென்சிக்கு தெரிவிக்கிறீர்களா?**

இல்லை, சட்டத்தின்படி தேவைப்படாவிட்டால் தவிர, உங்கள் குழந்தையின் பராமரிப்பு குழுவைத் தவிர எவருக்கும் உங்கள் தகவலை நாங்கள் வழங்க மாட்டோம்.பல பல வாடிக்கையாளர்களுக்கு, அவர்களின் வருமானத்தைப் பற்றி நாங்கள் அறிந்தால், அது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் கிடைக்கக்கூடிய சேவைகளைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கவும், உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு ஆதரவை வழங்கவும் எங்களுக்கு உதவும்.

வருமானம், பராமரிப்பு மற்றும் ஆதரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பாதிக்கக்கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தத் தகவல்களைச் சேகரிப்பது, சாத்தியமான தடைகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய

எங்களுக்கு உதவுகிறது. இதன்மூலம் அனைத்துக் குடும்பங்களுக்கும் பராமரிப்பு, சேவைகள் மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகளில் சமமான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

**10. நான் பங்கேற்க வேண்டுமா?**

இல்லை. பங்கேற்பு முற்றிலும் உங்கள் விருப்பமே.

நாங்கள் இந்தத் தகவலை ஏன் சேகரிக்கிறோம், அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் பராமரிப்புக் குழுவிடமோ, ஹாலண்ட் ப்ளூர்வியூவின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் இயக்குநரிடமோ அல்லது ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி செயல்பாடுகள் மற்றும் வணிக மேம்பாட்டு இயக்குநரிடமோ கேட்கவும்.

*Health Equity Office (சுகாதார சமபங்கு அலுவலகம்), Toronto Central LHIN Measuring Health Equity (டொராண்டோ மத்திய LHIN சுகாதார சமபங்குஅளவிடும்)-நிறுவனத்தின் Sinal Health System" திட்டம் (*torontohealthequity.caa*) உருவாகிய தகவலிலிருந்து தழுவப்பட்டது.).*